# மலைக் கோவில் சாமுண்டி மாதா

-சாந்திப்பிரியா-

*(ஓம் சரவண பவா* , ஆகஸ்ட், 2005 இதழில் வெளியான
இந்த கதையின் சிறிது மாற்றப்பட்ட மறு பதிப்பு இது *)*



துல்ஜா பவானி



சாமுண்டி மாதாவின் இரு தோற்றங்கள்

ஆலயம் செல்லும் வழி




## ஆலயம்

மத்தியப் பிரதேசத்தில் உள்ள பல ஆலயங்கள் பிரசித்தி பெற்றவை. இந்தூர்-போபாலுக்கு இடையே உஜ்ஜயினியின் அருகில் உள்ள தேவாஸ் என்ற மாவட்டத்தில் ஒரு உயரமான மலை மீது பிரசித்தி பெற்ற, சக்தி வாய்ந்த ஆலயமான சாமுண்டேஸ்வரி ஆலயம் அமைந்து உள்ளது. அந்த ஆலயத்தை சக்தி பீடங்களில் ஒன்றாகக் கூறுகின்றனர். தக்ஷ்ய யாகத்தில் ஏற்பட்ட அவமானத்தைத் தாங்கிக் கொள்ள முடியாமல் போன சிவபெருமான் இறந்து போன மனைவியை தோளில் தூக்கிக் கொண்டு ஆடிக்கொண்டு உலகெங்கும் போன பொழுது

அவருடைய கோபத்தை சாந்தப்படுத்த விஷ்ணுவானவர் அவள் உடலை தன் சுதர்சன சக்கிரத்தினை ஏவி வெட்டி விட அது 51 துண்டுகளாகி பல்வேறு இடங்களில் விழுந்த பொழுது அவை விழுந்த இடங்களில் தோன்றிய பல சக்தி பீடங்களில் தேவாஸ் நகரில் மலை மீது உள்ள சாமுண்ட மாதா ஆலயமும் ஒன்றாம்.

பல ஆண்டுகளுக்கு முன்னர் உஜ்ஜயினியை ஆண்டு வந்த மாமன்னன் விக்ரமாதித்யனின் தம்பியான பர்த்தஹரி என்பவர் இந்த ஆலயம் உள்ள மலை மீது தவம் செய்ய வந்தார். அவர் நாத் என்ற சமூகத்தை சேர்ந்தவர், பெரிய மகான் என்பதினால் அவரை விசார் நாத்ஜீ என அன்புடன் அழைத்தனர். அவரை தரிசிக்க பலரும் அந்த மலைக்கு வந்து கொண்டு இருந்தனர். அப்பொழுது அந்த மலையில் வாழ்ந்து வந்த நடகாசுரன் என்ற அசுரன் பர்த்தஹரியை தரிசிக்க வந்தவர்களை தடுத்து துன்புறுத்தத் துவங்கினான். அதனால் மலையில் செல்ல மக்கள் பயந்தனர். ஆனால் அந்த அசுரனால் முனிவரான பர்த்தஹரியை ஒன்றும் செய்ய முடியவில்லை. பர்த்தஹரி அந்த இடம் சக்தி பீடங்களில் ஒன்று என்பதை உணர்ந்தார். ஆகவே நடகாசுரனுடைய கொடுமைக்கு முடிவு கட்ட அவர் அந்த தேவியிடமே பிரார்தனை செய்தார். அவர் செய்த கடுமையான தவத்தினால் மனம் மகிழ்ந்த தேவியும் அவர் முன் காட்சி தந்து அவரது வேண்டுகோள் என்ன என வினவினாள். அவர் நடகாசுரனின் தொல்லைகளை எடுத்துக் கூறி அவனிடம் இருந்து தம்மைக் காணவரும் பக்தர்களுக்கு பாதுகாப்பு வேண்டும் எனக் கேட்க, தேவியும் அந்த நடகாசுரனை அழித்து அவருடைய வேண்டுகோளை நிறைவேற்றினாள். அந்த தேவிதான் சாமுண்டா என்கின்ற தேவியாக அந்த மலையில் இருப்பதாகக் கூறுகின்றர்.

பூமியில் இருந்து சுமார் 350 உயரத்தில் மலை மீது அமைந்துள்ள இரண்டு ஆலயத்தில் இரண்டு தேவிகள் உள்ளனர். அவர்களில் பெரியவள் துல்ஜா பவானி எனவும், சிறியவள் சாமுண்டா எனவும் பெயர் கொண்டு இருந்தனர். ஆதாரபூர்வமாக சாமுண்டி ஆலயத்தை நிறுவியவர் யார் என்ற விவரம் எங்குமே கிடைக்கவில்லை. சுமார் எட்டடிக்கும் உயரமான, கையில் பெரிய வாளை ஏந்திய நிலையில் உள்ள சாமுண்டி மாதாவின் சிலை மலையின் ஒரு குகையில் பதிந்துள்ள ஒரு பெரிய பாறையில் செதுக்கப்பட்டு உள்ளது. அந்த இருவரில் முதலில் பிரதிஷ்டை செய்யப்பட்டவள் யார் எனத் தெரியவில்லை என்றாலும், ஆலயம் சாமுண்ட மாதா ஆலயம் என்ற பெயரையே கொண்டு உள்ளது. அது பல நூற்றாண்டுகளுக்கு முட்பட்ட ஆலயம் எனவும் அதை நிறுவியவர்கள் மராட்டிய வம்சத்தை சேர்ந்தவர்களாகவே இருந்திருக்க வேண்டும் எனவும் தெரிகின்றது. அதற்குக் காரணம் துல்ஜா பவானிக்கு மகாராஷ்டிராவில் சிவாஜி காலத்தில் ஆலயம் அமைந்து இருந்திருக்கின்றது. சிவாஜி பவானி தேவியின் பக்தர். தேவாஸ் அடங்கிய மால்வா என்ற பகுதியை ஆண்டவர்கள் மராட்டிய வம்சத்தைச் சேர்ந்தவர்கள்.

பவானி என்றால் வாழ்வு கொடுப்பவள், எண்ணங்களுக்கு வலிமை தருபவள் என்ற அர்த்தம் உள்ளதாகவும், அவளை கருணாஸ்வருபினி என்று அதாவது கருணை மிக்கவள் என்ற அர்த்தம் தரும் பெயரைக் கொண்டவள் எனவும் கூறுகின்றனர். துல்ஜாபவானி என்பவள் பார்வதியின் மற்றொரு அவதாரமானவள். பவானியை பன்னிரண்டாம் நூற்றாண்டில் மராதா மன்னன் சிவாஜி ஆராதனை செய்து வந்தார். 1864 ஆம் ஆண்டில் மத்தியப் பிரதேசத்தில் மால்வா பகுதியை உள்ளடக்கிய தார் என்ற பகுதியை ஆண்டு வந்த அவருடைய வம்சாவளியில் வந்த நாராயண பவார் என்ற மன்னன், பவானியை 'மகா காளி, மகாலஷ்மி மற்றும் மகா சரஸ்வதி, திரைலோக சுந்தரி எனவும் போற்றிப் புகழ்ந்து ஒரு தோத்திரம் பாடி உள்ளதினால் தேவாஸ் நகரில் துல்ஜா பவானிக்கு ஆலயத்தை அவரே நிறுவி இருக்கலாம் எனவும் ஒரு பிரிவினர் நம்புகின்றனர்.

ஆலயத்தில் உள்ள இரண்டு தேவிகளும் சகோதரிகள். பல பக்தர்களும் அங்கு மலையேறி வந்து அவர்களை வணங்கி வந்தனர். அப்படி வரும் பக்தர்கள் முதலில் எவரை வந்து வணங்க வேண்டும் எனபதில் விவாதம் ஏற்பட அதனால் இரு சகோதரிகளுக்கும் சண்டை ஏற்பட்டதாம். இளையவளினால் மூத்தவளுடன் ஒத்துப் போக முடியாமல் போனதினால் கோபமுற்று மலையை பிளந்து கொண்டு வடக்கு நோக்கிச் சென்றாளாம். ஆனால் அவள் மலையை விட்டு வெளியில் போகக் கூடாது எனவும், தனித்தனியே இருந்தாலும் அவர்கள் பக்தர்களுடைய நலனைக் கருத்தில் கொண்டு அந்த மலையிலேயே தங்கி இருந்து கொண்டு அவர்களைக் காத்தருள வேண்டும் என விண்ணப்பித்துக் கொண்டு கிளம்பிச் சென்ற இளைய சகோதரியை அனுமான் தடுத்து நிறுத்தினாராம். அதை ஏற்றுக் கொண்ட சாமுண்டி தேவியும் வடப்புறத்தில் இருந்த குகையில் சென்று தங்கி விட்டாள். மூத்த சகோதரியான துல்ஜா தேவி என்றும் போல தெற்குப்புறத்தில் வசிக்கலானாள். அதனால்தான் சாமுண்டியை வணங்கிய நிலையில் உள்ள அனுமான் சிலை மலையில் உள்ளது. சாமுண்டி தேவி மலையை பிளந்து கொண்டு சென்றதினால்தான் அந்த குகையின் பின்புறம் பாறையில் பெரிய பிளவு உள்ளது.

அது போல இரண்டாகப் பிளவு பட்டிருந்த தேவாஸ் நகர இளைய மற்றும் மூத்த மகராஜாக்களுக்கும் அந்த இரண்டு சகோதரிகளும் இரண்டு பிரிவான இராஜ்ய தேவிகளாயினர். மூத்தவரான துக்கோஜி ராவ் பவார் என்பவர் சாமுண்டி தேவியை வணங்கத் துவங்க , இளைய மகாராஜாவான ஜீவாஜி ராவ் பவார் என்பவர் மூத்த சகோதரியான துல்ஜா பவானியை இஷ்ட தெய்வமாக்கிக் கொண்டார். அது மட்டும் அல்ல அந்த இரண்டு மகாராஜாக்களும் அவரவர் சமஸ்தானத்தில் இருந்த மக்கள் இராஜ்ய தேவியை பூஜிக்க மலைக்கு செல்வதற்கு வசதியாக தனித்தனியான மலை வழிப் பாதையை அமைத்தனர். ஆனால் மலைக்குச் செல்ல இரண்டு பாதைகள் ஏற்பட்டன. அது மட்டும் அல்ல தேவாஸ் நகரத்துக்குள்ளேயே தடுப்புச் சுவர்

எழுப்பப்படாமல் வைத்திருந்த அவர்களுடைய தனித்தனியான பகுதிகளில் தனித்தனியாக பாதைகள் அமைக்கப்பட்டும், குடி நீர் வசதியும் செய்தும் கொடுக்கப்பட்டனவாம். ஆனாலும் மலை மீது எறிச் சென்ற பக்தர்கள் ஒன்றுபட்டு இரண்டு தேவிகளையும் வணங்கி 'ஜெய் மாதாகீ ஜெய்' என கோஷமிட்டனர்.

மலை மீது ஒரு இடத்தில் கற் குவியல் உள்ளது. அவை என்ன எனில் அந்த மலையில் இருந்து சிறு கற்களை எடுத்து ஒரு வீடு கட்டுவதாக நினைத்துக் கொண்டு குவியலாக வைத்துவிட்டால் நிச்சயமாக ஒருவருக்கு சொந்த மனை பெறும் பாக்கியம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் கட்டப்பட்ட வீடுகள். பல்வேறு இடங்களில் இருந்தும் சாரிசாரியாக பெரும் திரளான மக்கள் காலணி எதுவும் அணியாமல் நடந்தே வந்து மலை மீது சென்று இரு தேவிகளையும் வணங்குவது நவராத்திரி காலத்தில் காண வேண்டிய காட்சியாகும். அந்த ஒன்பது நாட்களிலும் ஆலயம் இருபத்தி நான்கு மணி நேரமும் திறந்து விடப்பட்டுள்ளது.

இரண்டு தேவி சன்னதிகளைத் தவிற மலையைச் சுற்றி பைரவர், ஆஞ்சனேயர், அன்னபூரணி, காளி போன்றவர்களுக்கும் தனித்தனியான குகைகளில் சன்னதிகள் உள்ளன. அவற்றைத் தவிற சமய ஒற்றுமைக்குச் சான்றாக அந்த மலை மீது உள்ள தேவிகளின் ஆலயத்திற்கு மேல் பகுதியில் ஒரு முஸ்லிம் பீருடைய (மகான்) சமாதியும் உள்ளது. முஸ்லிம் பெருமக்களும் அங்கு சென்று அவரை வணங்கி வருகின்றனர். அற்புதமாக சலவைக் கற்களினால் கட்டப்பட்ட ஒரு ஜெயின் ஆலயமும் அங்கு உள்ளது.